## அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.25/2018 நாள். 30–4–2018

## தனி அலுவலர் அவர்களின் ஏப்ரல் 2018 மாதம் சாதாரண கூட்டப்பொருள்

30–4–2018ம் நாள் திங்கள்கிழமை காலை 10.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் ஏப்ரல் 2018 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

**பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்**

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | மார்ச் 2018 | 0 | 0 | 8 | 7 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஏப்ரல் 2018 மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்

**பொருள் எண். 3**

அனகாபுத்தூர் நகராட்சி 2011ம் வருடம் முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியானது தற்போது 18 வார்டுகளை உள்ளடக்கியதாகவும் 4.00 ச.கி.மீ. பரப்பளவு கொண்டதாகவும் 2011 ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 48050 மக்கள் தொகை கொண்டதாகவும் உள்ளது.

இந்நகராட்சியில் 389 சாலைகள் சுமார் 55.00 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைந்துள்ளன. இப்பகுதியில் 10875 வரி விதிப்புகள் உள்ளன. இவற்றில் 10538 குடியிருப்புகளாகவும், 319 வணிக பயன்பாடு கட்டடங்களாகவும், 18 எண்ணிக்கை தொழிற்சாலைகள் அமைந்துள்ளது. இந்நகராட்சி பகுதியில் 10875 நச்சுத் தடை தொட்டிகளில் 9243 குடியிருப்பு நச்சுத் தடை தொட்டிகளாகவும், 319 வணிக பயன்பாட்டு கட்டடங்களில் உள்ள நச்சுத் தடை தொட்டிகளாகவும், 18 எண்ணிக்கை

தொழிற்சாலை கட்டடங்களில் உள்ள நச்சுத் தடை தொட்டிகளை அந்த கட்டட உரிமையாளர்கள் மூலம் பயன்பாட்டில் பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றன.

அனகாபுத்தூர் மற்றும் பம்மல் நகராட்சிகள் சென்னை ஒட்டி அமைந்துள்ளதால் அதிகளவில் குடியிருப்புகள் உருவாகி உள்ளது. இக்குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் அடையாறு ஆற்றில் கலந்து ஆற்று நீர் மாசுபடுவதுடன் நிலத்தடி நீரும் மாசுபடும் நிலை உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி அனகாபுத்தூர் நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயார் செய்யும் பணியினை Tamil Nadu Water Investment Company Limited (TWIC) மூலம் மேற்கொள்ளஅனுமதிக்கு.

**<u>பொருள் எண். 4</u>**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் விவரப்படியாக பராமரிக்கப்படும் தெருவிளக்குகளை பராமரிப்பு பணி செய்ய ஒரே ஒரு மின் பணியாளர் மட்டும் இருக்கும் காரணத்தால், தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியர் மூலம் (இயக்குதலும், பராமரித்தலும்) ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஒப்பந்த காலம் **31.05.2018**ம் தேதியுடன் முடிவடைய உள்ளதால், மீண்டும் ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பு வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பி வைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| Sl. No | Item Description | No. of Lights |
|---|---|---|
| 1 | 40W Tube Lights Fitting | 917 |
| 2 | 3 * 36 W CFL Fitting | 746 |
| 3 | 250W SV Lamp Fitting | 393 |
| 4 | 70 Watts LED Fitting | 94 |
| 5 | 4 * 24 W T5 Fitting | 28 |
| | Total | 2178 |

அலுவலக குறிப்பு:
இந்நகராட்சியில் தெருவிளக்குகளை பராமரிப்பு செய்ய ஒரே ஒரு மின் பணியாளர் மட்டும் இருக்கும் காரணத்தினாலும், பொது மக்களின் அத்தியாவசிய போக்குவரத்து நலன் கருதி நகராட்சியின் பராமரிப்பில் உள்ள தெருவியக்குகளை உடனுக்குடன் பராமரிக்கும் பணியினை தனியார் மூலம் மேற்கொள்ளவும், நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் ஒரு வருட காலம் நீட்டிப்பு பெற உரிய கருத்துரு அனுப்பிட மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**<u>பொருள் எண். 5</u>**

அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகளை மக்கும் வகை குப்பைகள் மற்றும் மக்காத வகை குப்பைகள் என தரம் பிரித்து புதிதாக அமைக்கப்பட்டுள்ள பசுமை உரக்குடிலில் உரம் தயார் செய்யும் திட்டத்தினை 100 சதவீதம் வெற்றிகரமாக செயல்படுத்திட 18 வார்டுகளிலும்

உள்ள பொதுமக்களுக்கு விழிப்பணர்வு ஏற்படுத்தவும் குப்பைகளை தனித்தனியாக தரம் பிரித்து வழங்க ஏதுவாக வீட்டிற்கு 2 பிளாஸ்டிக் சாக்கு பைகள் ஏற்கனவே வாங்கப்பட்டு பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். தற்போது கூடுதலாக 8000 பிளாஸ்டிக் சாக்கு பைகள் தேவைப்படுவதால் மேற்படி பிளாஸ்டிக் சாக்கு பைகளை ஒப்பந்தப்புள்ளி கோரி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான தோராய மதிப்பு ரூ.1.50 இலட்சம் ஆகும்.

<u>அலுவலகக்குறிப்பு</u>

பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனிமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண். 6</u>

15.03.2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு (லட்சத்தில்) ஜி.எஸ்.டி உட்பட | பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி சதவீதம் (மதிப்பீட்டிற்கு) திரு/திருமதி | |
|---|---|---|---|---|
| | | | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர் | விகிதம் |
| 1 | இலகுரக வாகனங்கள் சப்ளை செய்தல் பணி – 9 எண்ணம் | 50.40 | மெசஸ்.டாடா மோட்டர்ஸ் லிமிடெட் | 9.70 % குறைவு |
| | | | மெசஸ்.கிரிஸ்டல் மோட்டர்ஸ் (பி) லிமிடெட் | 3.23 % குறைவு |
| | | | மெசஸ்.சக்தி பாடி ஒர்க்ஸ் | 7.14 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு :</u> 1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. திட்ட பணி என்பதால் பணி அவசர அவசியத்தை கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தப்புள்ளி ஏற்பு கடிதம் (LOA) வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண். 7</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கல்மடுவு பகுதியில் உள்ள உரக்கிடங்கில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை Bio-Mining முறையில் அப்புறப்படுத்திட தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தனியார் நிறுவனம் மூலம் தயார் செய்யப்பட்டு பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி திட்ட அறிக்கையினை அண்ணா பல்கலை கழகத்தால் ஆய்வு செய்து மீள சமர்ப்பிக்குமாறு நகராட்சி

நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி மேற்படி திட்ட அறிக்கையினை ஆய்வு செய்து உதவுமாறு அண்ணா பல்கலைகழகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டதன் பேரில் பல்கலைகழத்திலிருந்து ஆய்வு கட்டணமாக ரூ.1,88,800/–ஐ (ஜி.எஸ்.டி உட்பட) செலுத்துமாறு அண்ணா பல்கலைகழக கடிதம் எண்.CES/DIR/ Anakaputhur Municipality/2018-19 நாள்.05.04.2018–ன் படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதியளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி தொகையினை வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண். 8**

அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகளை மக்கும் வகை குப்பைகள் மற்றும் மக்காத வகை குப்பைகள் என தரம் பிரித்து புதிதாக அமைக்கப்பட்டுள்ள பசுமை உரக்குடிலில் உரம் தயார் செய்யும் திட்டத்தினை 100 சதவீதம் வெற்றிகரமாக செயல்படுத்திட 18 வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தலும் குப்பைகளை தனித்தனியாக தரம் பிரித்து வழங்க ஏதுவாக வீட்டிற்கு 2 பிளாஸ்டிக் சாக்கு பைகள் சப்ளை செய்ய 25.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்டவாறு இரண்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | பேன்ஸி ஏஜன்சி, 27, ஜவஹர் தெரு, கிருஷ்ணமூர்த்தி நகர், சென்னை-118 | ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், ஏபி 101 பி,கே,எஸ் காம்ப்ளக்ஸ் 6வா வது மெயின் ரோடு, சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை–40. |
|---|---|---|---|
| | | (விலை ஒன்றுக்கு) | |
| 1. | 15 * 19 அளவு கொண்ட பிளாஸ்டிக் சாக்கு பைகள் | 16.00 | 18.00 |
| 2. | 19 * 29 அளவு கொண்ட பிளாஸ்டிக் சாக்கு பைகள் | 21.00 | 24.00 |

**அலுவலகக்குறிப்பு** 1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள பேன்சி ஏஜென்சி, சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு கூட்டம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 9**

அனகாபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான நாளங்காடி பொது ஏலம் 2015–2016 ம் 2016–17 மற்றும் 2017–2018 முடிய மூன்று ஆண்டுகளுக்கு ஏலம் விடப்பட்டு திருமதி.எஸ்.அம்மு என்பவருக்கு குத்தகை விடப்பட்டது. 2017–2018ம் ஆண்டு மேற்படி குத்தகைதாரர் நிலுவைத் தொகை ரூ.2,39000/–ஐ செலுத்தவில்லை. எனவே மேற்கண்ட நபருக்கு விடப்பட்ட குத்தகையை ரத்து செய்தும், நிலுவை தொகையை வசூலிக்க நடவடிக்கையில் உள்ளது. 01.04.2018 முதல் வசூல் பணி துறை முலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குத்தகை வசூல் பணியை தொடர்ந்து மேற்கொள்வதற்கு போதிய பணியாட்கள் இல்லாத காரணத்தால், 01.06.2018 முதல் 31.03.2021 வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை விடவும், பொது ஏலம் அறிவிப்பு வெளியிடு செய்வதற்கு அனுமதிக்கும் 01.06.2018 முதல் கீழ்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | இனம் | தற்போது வசூலிக்கப்படும் தொகை ரூ. | திருத்தி அமைக்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தரைகடைகள் | ரூ.5/– | ரூ.5/– |
| 2 | தள்ளு வண்டி | ரூ.10/– | ரு.20/– |
| 3 | மாட்டு வண்டி | ரூ.15/– | ரூ.20/– |
| 4 | இலகுரக வாகனம் | ரூ.20/– | ரூ.25/– |
| 5 | கனரக வாகனம் | ரூ.30/– | ரூ.40/– |

அலுவலக குறிப்பு:

1. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று துறை மூலம் நாளங்காடி வசூல் செய்யப்படுவதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. 01.06.2018 முதல் 30.03.2021 வரை நாளங்காடியில் குத்தகைதாரர் மூலம் சுங்கம் வசூலிக்கபட தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பொது ஏலம் அறிவிப்பு மற்றும் ஒப்பந்த புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 10</u>**

அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகள், வணிக கட்டிடங்கள் மற்றும் இதர பொது கட்டிடங்கள் உட்பட அமைந்துள்ள பகுதிகளில் உள்ள கழிவுநீர் நச்சுத் தொட்டியில் (Septic Tank) நிரம்பும் கழிவுநீரை சுகாதார முறையிலும் உயர்நீதிமன்றம் மற்றும் அரசாங்கத்தின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின் அடிப்படையில் அப்புறப்படுத்த வேண்டும் என்றும் நச்சு தொட்டியில் மனிதர்கள் எவரும் இறங்கி சுத்தம் செய்யக்கூடாது என்று அரசும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களும் பல்வேறு சமயங்களில் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 2018–19ம் ஆண்டிற்கு அனகாபுத்தூர் நகராட்சியில் மேற்கண்ட நச்சுத் தொட்டி கழிவுகளை சுகாதார முறையில் அப்புறப்படுத்த வாகனங்கள் இல்லாததால் தனியார் வாகனம் மூலம் அதாவது (Compressor Septic Tank Lorry) காற்றழுத்தம் பொருந்திய உறிஞ்சியாக இருக்கும். ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் அமர்த்தவும், அதற்கான ஒப்பந்த வாகன உரிமையாளர் மூலம் ஒரு ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் நடவடிக்கை எடுக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நச்சு தொட்டிகளில் கழிவுகளை அகற்ற கீழ்க்கண்ட விவரத்தின்படி வசூலிக்க வேண்டிய கட்டணம்**

| | | |
|---|---|---|
| 1. | சொந்த குடியிருப்பு | ரூ.750/– |
| 2. | சொந்த குடியிருப்பு மற்றும் வாடகை குடியிருப்புகளுக்கும் கூடுதல் | ரூ.1000/– |
| 3. | முழுவதும் வாடகை | ரூ.1000/– |
| 4. | வணிக வளாகங்கள் மற்றும் திருமண மண்டபங்கள் | ரூ.2000/– |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 11**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பெறப்படும் குடிநீரின் அளவு குறைந்துவிட்டபடியால், பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வது தடைப்பட்டுள்ளது. குடிநீர் விநியோகம் 7 நாட்களுக்கு ஒருமுறை விநியோகம் தடைப்பட்டுள்ளது. எனவே, பொது மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விறியோகம் செய்ய ஏதுவாக நகராட்சியில் உள்ள குடிநீர் நீர்த்தேக்க தொட்டிக்கு லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலகத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் பணி | 9.80 |
| 2 | அனகாபுத்தூர் நகராட்சி காமராஜபுரத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் பணி | 9.80 |
| 3 | நகராட்சி குடிநீர் லாரிக்கு விவசாய கிணற்றிலிருந்து குடிநீர் சப்ளை செய்தல் பணி | 3.00 |

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண். 12</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள குடியிருப்புகள், வணிக கட்டிடங்கள் மற்றும் இதர பொது கட்டிடங்களில் உள்ள நச்சுக்கழிவு நீர் தொட்டியிலிருந்து அகற்றும் உரிமத்திற்காக 27.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தள்ளி கோரியவர்கள் விவரம் | ஒப்பந்த விவரம் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1. | திரு.எம்.நித்தியானந்தம்<br>34, பக்தவச்சலம் தேரு,<br>அனகாபுத்தூர், சென்னை – 600 070. | 1. 4000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நச்சு தொட்டி<br>2. 4000 முதல் 7500 வரை லிட்டர் கொள்ளளவு கொண்ட நச்சு தொட்டி<br>3. 7500 லிட்டருக்கு மேல் கொள்ளளவு கொண்ட நச்சு தொட்டி | ரூ.1710.00<br>ரூ.1890.00<br>ரூ.2480.00 |
| | | 4. உரிமக்கட்டணம் | ரூ.120000.00 |
| 2. | ஜி.சுரேஷ்<br>42, பக்தவச்சலம் தேரு,<br>அனகாபுத்தூர், சென்னை – 600 070. | 1. 4000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நச்சு தொட்டி<br>2. 4000 முதல் 7500 வரை லிட்டர் கொள்ளளவு கொண்ட நச்சு தொட்டி<br>3. 7500 லிட்டர்க்கு மேல் கொள்ளளவு கொண்ட நச்சு தொட்டி | ரூ.1810.00<br>ரூ.1960.00<br>ரூ.2590.00 |
| | | 4. உரிமக்கட்டணம் | ரூ.114000.00 |

**<u>அலுவலக குறிப்பு</u> :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண். 13</u>

11.04.2018, 27.04.18 அன்றைய தேதிகளில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கல்மடுவு குளத்தில் அமைந்துள்ள பூங்காவினை மேம்பாடு பணி செய்தல் | 5.00 | கே.உமாபதி<br>வி.குணாளன் | 0.15 % குறைவு<br>0.48 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | குப்பைகள் உருவாகும் இடத்தில் உரம் தயாரித்தல் பணி | 2.50 | கே.ஜேயசீலன் லஷ்மி எண்டர்பிரைசஸ் | 0.20 % குறைவு<br>1.10 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :** மேற்படி பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி னுமதியளிக்கலாம்.
2.பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**<u>பொருள் எண். 14</u>**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பொது மக்களுக்கு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் பெறப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பெறப்படும் குடிநீரில் போதிய அளவில் திரவ வடிவிலான குளோரினேசன் கலந்து வழங்க வேண்டியுள்ளதால் ஒரு வருட காலத்திற்கு குளோரின் லிக்யூட் வாங்கிட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதியளிக்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி